**OS. 6/2024**

**நாள்.** 17.03.2026.

**வா.சா.1 – தேவி**

<u>1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

என் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் வருடம் தெரியாது, ஆனால் இறந்து 22 வருடங்கள் இருக்கும். என் திருமணதேதி என்னவென்றால் 1991ம் வருடம் நடைபெற்றது. தேதி, மாதம் ஞாபகமில்லை. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பெண் குழந்தைகள். இருவருக்கும் திருமணமாகிவிட்டது என்றால் ஆகிவிட்டது. மூத்தபெண்குழந்தை பிறந்த வருடம் 1996. இவ்வழக்கு தாக்கல்செய்வதற்கு முன்பு நான் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பில் ராஜேஸ்பாபு என்பவர் 2007ல் 1ம் இலக்க சொத்தில் ஒருபகுதியை கிரையம் பெற்றுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மாரிமுத்து மனைவி பகவதி 1ம் இலக்க சொத்தில் ஒருபகுதியை 13.03.2013ல் கிரையம் பெற்றுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஜான்சன் மனைவி மிலோனி என்பவர் 2ம் இலக்க சொத்தில் ஒருபகுதியை 13.03.2013ல் கிரையம் பெற்றுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 10.06.2013ம் தேதி அகமதுகான் என்பவர் 2ம் இலக்க சொத்தின் ஒருபகுதியை கிரையம் பெற்றுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.06.2016ம் தேதி 2ம் இலக்க சொததின் ஒருபகுதியை அப்துல்லா மகன் அன்வர்சா கிரையம் பெற்றுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 03.09.2007ல் 1ம் இலக்க சொத்தில் ஒருபகுதியை ஜோஸ்பின்மேரி மற்றும் ஜோதி ஆகிய இருவரும் கிரையம் பெற்றுள்ளார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 19.11.2007ல் சிவகுமார் என்பவரும் 1ம் இலக்க சொத்தில் ஒருபகுதியை கிரையம் பெற்றுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1, 2 இலக்க சொத்துக்களை கிரையம் பெற்றுள்ள நபர்களை நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன்.

என் தகப்பனார் இறந்த பின்பு என் சகோதரர்களிடம் பாகம் பிரித்துதர கேட்டேனா என்றால் நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் அனுபவித்து வந்தோம். என் சகோதரர்கள் கிரையம் செய்த விவரம் 05.05.2023 ம் தேதி தெரிந்த பின்புதான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன். காளிமுத்து தேவருக்கு, கருப்பையாதேவர், ராசுதேவர் ஆகிய இருவர் மட்டுமே வாரிசுகள் என்றால் சரியல்ல, நானும் ஒரு வாரிசு. காளிமுத்து தேவருக்கு நான் வாரிசு என்பதை காட்டுவதற்கு ஆவண ஆதாரம் உள்ளதா என்றால் ஜாதகம், ஆதார்அட்டை, திருமண பத்திரிக்கை உள்ளது. 10, 11 பிரதிவாதிகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கும்போது நான் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 80(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 7 இலக்க சொத்தை தவிர்த்து காளிமுத்து தேவருக்கு வேறுசொத்துக்களும் உள்ளது என்றால் இல்லை. நான் காளிமுத்து தேவருக்கு வாரிசு இல்லை என்றும், அதனால் தாவா சொத்துக்களில் எனக்கு எந்த பாகஉரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தேவையான தரப்பினர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்பதாலும், என் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.